மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்.8/2019

வாக்குமூலம். வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுந்தரமூர்த்தி | ஜாதி | |
| த/பெ. | ராமச்சந்திரன் | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 74 /2023 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 11.09.2023-ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தாவா வழக்கில் 1ம்வாதி/ வாதி தரப்பு முதலாவது சாட்சி ஆவேன். என்னால் தாக்கல் செய்யப்படும் நிருபண வாக்குமூலத்தை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 14.07.1997 தேதிய நான் கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் பிரதிவாதி தரப்பில் மேற்படி ஆவணத்தின் அசலை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படாமல் சான்றிட்ட நகல் தாக்கல் செய்யமுடியாது என்று ஆட்சப்பிக்கப்பட்டு ஆட்சபணையுடன் வா.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 14.07.1997 தேதிய 2ம் வாதி கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் பிரதிவாதி தரப்பில் மேற்படி ஆவணத்தின் அசலை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படாமலும் 2ம் வாதியை விசாரிக்காமலும் என்று ஆட்சப்பிக்கப்பட்டு ஆட்சபணையுடன் வா.சா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா அ அட்டவணை சொத்துக்கான தூய அடங்கல் பதிவேடு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா ஆவண அட்டவணை சொத்துக்கான புலப்படம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா அ அட்டவணை சொத்துக்கான புலப்படம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 13.05.2015 ம் தேதியில் நான் எனது வழக்கறிஞர் மூலம் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு நகல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை பதிவு அஞ்சலில் அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது அசல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை 3ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் 3ம் பிரதிவாதியிடம் கொடுத்த மனு கைநகல்

தாக்கல் செய்கிறேன் அது வா.சா.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்துக்கான நகர நிலவரித்திட்ட தூய சிட்டா சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா அ அட்டவணை சொத்துக்கான கதவு எண்.29 க்கான வீட்டு வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது, தாவா அ அட்டவணை சொத்துக்கான கதவு எண்.29-1 க்கான வீட்டு வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது, மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்கா முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.